**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 07.11.2025.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**அசல் வழக்கு எண். 1/2025**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நடராஜன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | முனுசாமி | வயது | : | 62 |
| ஊர் | : | செய்யாறு | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 1 (நடராஜன்): வாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கு சொத்தை எங்களுக்கு உரிமையானது என்பதற்காக நானும் மற்றும் 12 நபர்களும் சேர்ந்து கிரையம் பெற்றுள்ள கிரையப்பத்திரத்தை தவிர வருவாய்த்துறை ஆவணங்கள் ஏதேனும் வைத்துள்ளேனா அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி வழக்கு சொத்தை யாரிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் ரங்கநாயகி அம்மாள் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றேன். மேற்படி சொத்தானது ரங்கநாயகியம்மாளுக்குத்தான் சொந்தமானது என்பதற்கான ஆவணம் ஏதேனும் வைத்துள்ளேனா அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ரங்கநாயகியம்மாளுக்கு சொந்தமான சொத்து என்பதற்கு நான் கிரையம் வாங்கிய தேதியிலும் இன்றைய தேதி வரையிலும் எந்த ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி வழக்கு சொத்தானது சின்னத்தாய் அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தானது என்பதற்கான ஆவணம் ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் சின்னத்தாய் அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்கிறீர்கள் என்று சொன்னால் ரங்கநாயகி அம்மாள் எனக்கு தெரிவித்தார். மேற்படி சின்னத்தாய் அம்மாளின் வாரிசுகளாக அம்மாளம்மாள் மற்றும் கனகம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்று சொல்வதற்கும் அவர்கள்தான் வழக்கு சொத்தை அடைந்து அனுபவித்து வந்தனர் என்று சொல்வதற்கும் ஆவணங்கள் ஏதேனும் வைத்துள்ளேனா அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் மேற்படி இருவரும் வாரிசுகள்தான் என்றும் ஆண் வாரிசு இல்லை என்றும் வழக்கு சொத்தை அடைந்து அனுபவித்து வந்தனர் என்று சொல்கிறேன் என்றால் ஊர் பெரியவர்கள் தெரிவித்த நம்பிக்கையின் பேரில் தான் கிரயம் பெறப்பட்டது.

3. மேற்படி தகவல்கள் அனைத்துக்கும் சான்றாவணங்கள் ஏதேனும் இன்றைய அளவிலும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில்

நான் இரண்டாம் பத்தியில் கூறியுள்ளவாறு அம்மாளம்மாள் வாரிசுகள் எவரும் இன்றி இறந்துவிட்டார் என்றும் அதன் பிறகு கனகம்மாள் தன்னுடைய பாகத்தையும் அம்மாளம்மாள் பாகத்தையும் சேர்ந்து அனுபவித்து வந்தார் என்பதற்கும் அதன் பிறகு கனகம்மாள் தன்னுடைய குமாரத்தியான ரங்கநாயகியம்மாளை வாரிசாக விட்டு இறந்துவிட்டார் என்பதற்கும் மேற்படி ரங்கநாயகியம்மாள் கனகம்மாள் இறந்தபிறகு முழு உரிமையுடன் அடைந்து அனுபவித்து வந்தார் என்பதற்கும் ஆவணங்கள் ஏதேனும் வைத்துள்ளேனா அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3ல் தினகரனும் சுப்பராயன் என்பவருக்கும் வழக்கு சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்று சொன்னால் அவர்கள் இருவரும் எங்கள் ஊரில் வசித்து வந்ததே இல்லை. அவர்கள் யார் என்றே எங்களுக்கு தெரியாது. வழக்கு சொத்தானது அம்மாளம்மாளுக்குத்தான் பாத்தியம் என்றுதான் ஊரில் உள்ள அனைவருககும் தெரிந்த விவரம். ஒரு சொத்தானது யாருக்கு உரிமையானது என்பதை உரிமை ஆவணம், அனுபவத்தின் அடிப்படையிலும்தான் சொல்ல முடியும் என்று சொன்னால் சரிதான். ஒரு சொத்தினை கிரயம் செய்வதற்கு அதற்கு உரிமையான நபர் மட்டும்தான் கிரயம் செய்யப்படமுடியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி 28.07.1994 கிரய ஆவணமானது எந்த ஒரு ஆவணத்தின் அடிப்படையிலும் கிரயம் பெறவில்லை, அதனால் அது செல்லாது ரத்து செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நபர் அனுபவித்து வந்ததன் அடிப்படையில்தான் கிரயம் பெற்றோம். மேற்படி கிரயமானது சட்டத்தின் படி ஆவணங்களை வைத்து சரிபார்த்து பெறவில்லை என்று சொன்னால் ஆவணங்களின் அடிப்படையில்தான் கிரயம் வாங்கினோம்.

5. எந்த ஆவணம் என்று சொன்னால் கிரயப்பத்திரத்தின் அடிப்படையில்தான் சொல்கிறேன். மேற்படி கிரயமானது எந்த ஒரு ஆவணத்தின் அடிப்படையில் பெறப்பட்டது என்றால் ஊர் பெரியவர்கள் வைத்திருப்பார்கள். ஆனால் என்னிடம் இல்லை. நான் கிரயம் பெறுவதற்கு முன்பு ஊர் பெரியவர்களோ அல்லது என்னுடன் கிரயம் பெற்ற நபர்களோ எந்த ஆவணத்தையும் சரி பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நாங்கள் கிரயம் பெற்ற வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறோம் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் என்ன ஆவணம் என்றால் கிரயப்பத்திரம் மற்றும் சில ஆவணங்கள் ஆகும். மேற்படி கிரயப்பத்திரத்தை தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தானது தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. யார் அனுபவிக்கிறார்கள் என்று அ பதிவேட்டிலும் அடங்கலிலும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

6. வருவாய்த்துறை ஆவணங்களில் யார் பெயரில் உள்ளது என்பதனை 1994 முதல் இந்நாள் வரை தெரியுமா என்று சொன்னால் தெரியாது. ஒரு சொத்தினை கிரயம் பெற்றபிறகு பட்டா மாற்றம் செய்துகொண்டபிறகு அனுபவித்து வருவார்கள் என்று சொன்னால் சரிதான். அதன்படி நான் கிரயம் வாங்குவதற்கு முன்னால் 1ம் பிரதிவாதி 06.05.1994 அன்று மேற்படி வழக்கு சொத்தினை சரியான பிரதிபலனுக்கு கிரயம் பெற்று பட்டா மாற்றம் செய்துகொண்டு அனுபவித்து வந்தார் என்றால் 1ம் பிரதிவாதி உண்மையான நபரிடம் இருந்து கிரயம் பெறவில்லை. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற பிறகு அவர் மனைவி 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து மனைவி பெயரில் பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் 1ம் பிரதிவாதி தன் பெயருக்கு பட்டா மாற்றம்

செய்யவில்லை. மேற்படி 1ம் பிரதிவாதி ஆறுமுகம் சரியான ஆவணங்களை பரிசீலித்து பின்புதான் கிரயம் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சொத்துக்கு உரிமையான நபரிடம் கிரயம் பெறவில்லை.

7. 1ம் பிரதிவாதி ஆறுமுகம் கிரயம் பெற்ற வழக்கு சொத்தின் பட்டாவானது சுப்பராயலு மற்றும் தினகரன் அவர்களின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் உள்ளது அதனை பிரதிவாதி தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளார் என்று சொன்னால் ஆறுமுகம் உரிய நபரிடம் கிரயம் பெறவில்லை. வழக்கு சொத்தானது அவருக்கு உரிமையானது அல்ல. மேற்படி ஆறுமுகம் உரிய நபரிடம் இருந்து கிரயம் வாங்கப்படவில்லை என்பதை உரிய ஆவணம் இன்றி நான் சொல்வதற்கு தகுதி அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள பத்தி 2, 3, 4ல் குறிப்பிட்டுள்ள அம்மாளம்மாள், கனகம்மாள், ரங்கநாயகி சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும் ஆறுமுகத்தின் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது ஒரு பொது நலனுக்காக கிரயம் பெறப்பட்ட சொத்து என்றும் அதனை அனைவரும் வழியாக பயன்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் பெறப்பட்டது.

8. ஒரு சொத்தினை கிரயம் பெறும்பொழுது மேற்படி சொத்தில் வில்லங்கம் ஏதும் உள்ளதா என்று பார்த்துதான் வாங்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தினை வில்லங்கம் போட்டு பார்த்துதான் கிரயம் பெற்றோம். மேற்படி வில்லங்க சான்றினை கையில் வைத்துள்ளீர்களா என்றால் வைத்துள்ளேன். ஆனால் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி நான் கிரயம் பெறும்போது வழக்கு சொத்தில் வில்லங்கம் ஏதேனும் உள்ளதா என்று பார்த்தேனா என்றால் 1 வில்லங்கம் இருந்தது. மேற்படி வில்லங்கம் யார் பெயரில் இருந்தது என்றால் ஆறுமுகம் பெயரில் இருந்தது. மேற்படி ஆறுமுகம் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரிந்துதான் கிரயம் பெற்றோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் உரிமையான நபர்களிடம் இருந்து கிரயம் பெற்றோம்.

9. நான் மற்ற நபர்களும் கூட்டாக சேர்ந்து சொத்துக்களை வில்லங்கம் செய்து பணம் பறிக்கும் நோக்கத்தோடு செயல்படுவதை வாடிக்கையாக வைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பொது நோக்கத்தோடு மக்கள் நலனுக்காக வழக்கு சொத்தில் வழி கேட்டு தாக்கல் செய்துள்ளோம். 1ம் பிரதிவாதி ஆறுமுகம் ஏற்கனே அசல் வழக்கு 350/1994 சின்னவேலு, துரைசாமி, பூங்காவனபிள்ளை, மணி அவர்களின் மீது தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கானது வாதி விசாரணைக்கு ஆஜராகவில்லை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் தற்போது தாக்கல் செய்துள்ள வழக்கில் மேற்படி சின்னவேலு, துரைசாமி, பூங்காவனபிள்ளை, மணி அல்லது அவர்களின் வாரிசுகளோ சேர்த்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் பூங்காவனப்பிள்ளை மட்டும் இவ்வழக்கில் தரப்பினராக உள்ளார். மேற்படி 1ம் பிரதிவாதி ஆறுமுகத்தின் மகள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி அவர் எப்படி இறந்தார் என்றால் மின்சாரம் தாக்கி இறந்தார். என்னுடைய அண்ணன் முருகன் என்பவரின் நிலத்தில் மின்சாரம் பாய்ந்து உயிர் இழந்தார்.

10. மேற்படி சூழ்நிலையின் காரணமாகத்தான் அவஎண் 350/1994 ஆனது வாதியால் நடத்தமுடியாமல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும் அதனை அடிப்படையாக கொண்டு இந்த வழக்கினை நடத்த முடியாது என்று சொன்னால் அந்த

காரணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. நாங்கள் இந்த வழக்கினை பொது வழியாக பயன்படுத்துவதற்காகத்தான் தாக்கல் செய்தோம். மேற்படி சின்னவேலு, துரைசாமி, பூங்காவனபிள்ளை, மணி ஆகியோர்களும் மற்றும் நாங்களும் வழக்கு சொத்தானது பிரதிவாதிக்கு உரியது என்பதால்தான் அப்போது பிரச்சனை செய்யவில்லை என்றும் தற்போது நிலத்தின் மதிப்பு கூடி விட்ட காரணத்தினால் அவரின் நிலத்தினை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**(கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2025.11.07 18:16:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு